DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII Code of Criminal Procedure)

---

IN THE COURT OF IV ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, MADURAI

**S.C. No.456/2016**

**P.W.28**

DEPOSITION OF WITNESS FOR PROSECUTION DEFENCE COURT

| | | |
|---|---|---|
| NAME | : | சக்கரவர்த்தி |
| Father Name | : | கோபால் |
| VILLAGE | : | |
| CALLING | : | |
| AGE | : | 55 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 13.02.2026.
(1, 2 மற்றும் 3 எதிரிகள் ஆஜர். 7வது எதிரி ஆஜர்படுத்தப்பட்டார்.)

<u>**அரசு தரப்பில் முதல் விசாரணை :**</u>

நான் தற்போது திருச்சி இரயில்வே உட்கோட்ட காவல் துணை கண்காணிப்பாளராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்பு மதுரை மாநகர் கே புதூர் காவல்நிலைய சட்டம் ஒழுங்கு காவல் ஆய்வாளராக பணிபுரிந்த போது 22.11.2015ம் தேதி 10.30மணிக்கு கே புதூர் காவல் உதவி ஆய்வாளர் **அ.சா.27** திருமதி. சுஜாதா அவர்கள் கே புதூர் காவல்நிலைய குற்ற எண்.1017/2015 பிரிவுகள் 341, 294(b) மற்றும் 307 இ.த.ச ன் படி வழக்கு பதிவு செய்து **அ.சா.ஆ.10** முதல் தகவல் அறிக்கையினை என் விசாரணைக்கு அனுப்பி வைத்ததை நான் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு அன்றைய தினம் 12.00ம மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் **சாட்சி எண்.7** முருகானந்தம், **அ.சா.7** கார்த்திகேயன் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். அந்த பார்வை மகஜர் **அ.சா.ஆ.11** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி மாதிரி வரைபடம் **அ.சா.ஆ.12** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அதன் பிறகு சம்பவ இடத்தில் வைத்து மேலே கண்ட சாட்சிகள் முன்னிலையில் TN 59 AL 0027 என்ற மாருதி ஸ்விப்ட் வெள்ளை நிற கார் இரத்த கறை படிந்த நிலையில் இருந்ததை ஒரு அத்தாட்சி மூலம்

கைப்பற்றினேன். அந்த அத்தாட்சி **அ.சா.ஆ.13** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி காரின் போட்டோ **அ.சா.ஆ.14** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 22.11.2015ம் தேதி 16.00 மணிக்கு இவ்வழக்கின் 1வது எதிரி பிரவீண் என்ற சகாய பிரவீண் மற்றும் 2வது எதிரி மாரிமுத்து ஆகியோர்களை கைது செய்து சம்பக்குளம் 120 அடி ரோடு, புதுமயானம் அருகே வைத்து சாட்சிகள் **சாட்சி எண்**.9 முத்துமொழி, **அ.சா.8** சந்தனமுருகேசன் ஆகியோர்கள் முன்னிலையில் கைது செய்து 1வது எதிரியிடம் ஒப்புதல் வாக்குமூலம் பெற்றேன். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி ஏற்கனவே **அ.சா.ஆ.8** ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேலும் அன்றைய தினம் 17.00மணிக்கு 1வது எதிரி பிரவீண் என்ற சகாய பிரவீண் ஆஜர்படுத்திய **சா.பொ.3** வெள்ளை நிற நோக்கியோ செல்போன் ஒன்று, **சா.பொ.4** TN 59 BE 1330 கருப்பு கலர் Honda Shine இருசக்கர வாகனம் ஆகியவற்றை **அ.சா.ஆ.5** அத்தாட்சியில் கைப்பற்றினேன். 1வது எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் சாட்சிகள் உடன் சென்று அன்றைய தினம் 18.00 மணிக்கு வண்டியூர் ரிங் ரோடு பிரிவில் உள்ள பழைய மோட்டார் ரூம் பின்புறம் எதிரி எடுத்து ஆஜர் செய்த **சா.பொ.1** சுமார் 36 செ.மீ நீளமுள்ள மரக்கைப்பிடியுடன் கூடிய கத்தி ஒன்று, **சா.பொ.2** சுமார் 35 செ.மீ தோலால் செய்யப்பட்த கத்தி உறை ஒன்று மேற்படி எதிரிகள் சொத்து சகிதம் நிலையம் வந்து அன்றைய தினம் 19.00 மணிக்கு மேற்படி எதிரிகளை தக்க வழிக்காவல் மூலம் நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தேன். மேலும் சாட்சிகள் **அ.சா.1** ராமகிருஷ்ணன், **அ.சா.2** அர்ஜீணன், **அ.சா.3** அன்பரசபாண்டி, **அ.சா.4** ராஜ்மோகன், **அ.சா.5** நியாஸ்கான், **அ.சா.15** முன்னமலை, **அ.சா.19** ரெங்கநாதன் ஆகியோர்களை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். 21.11.2013ம் தேதி இவ்வழக்கு சம்மந்தமாக சாட்சிகள் **அ.சா.6** ஈஸ்வரன், சார்பு ஆய்வாளர் மாதவன், தலைமை காவலர் **அ.சா.22** சாம்சன் குணராஜ் ஆகியோர்களை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். 25.11.2015ம் தேதி காலை 11.30 மணிக்கு3வது எதிரி ஆரோக்கிய பிரபுவை கற்பகநகர் 10வது தெருவில்

அவரது வீட்டின் முன்பு வைத்து கைது செய்து காவல்நிலையம் கொண்டு வந்து தக்க வழிக்காவல் மூலம் நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தேன். சாட்சிகள் **அ.சா.9** மணிமாறன் மற்றும் **அ.சா.10** மகேஸ்வரன் ஆகியோர்களை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். மேலும் 10.12.2015ம் தேதி இவ்வழக்கின் **7வது எதிரி** பாண்டி என்ற அட்டாக் பாண்டி என்பவருக்கு P.T வாரண்ட் வழங்க நீதித்துறை நடுவர் எண்.6, மதுரை அவர்களுக்கு வேண்டுகோள் கடிதம் கொடுக்கப்பட்டது. 14.12.2015ம் தேதி பாளையங்கோட்டை சிறை கண்காணிப்பாளரிடமிருந்து 7வது எதிரி சிறையில் இருப்பதற்கான சான்று மற்றும் அவரை பார்த்த பார்வையாளர்களின் விபரங்கள் அடங்கிய அறிக்கை கிடைக்கப்பெற்று இரண்டு அறிக்கைகளையும் சிறப்பு சார்வு ஆய்வாளர் **அ.சா.23** சரவணராஜ் மூலம் பெற்று நீதித்துறை நடுவர் எண்.6 மதுரை அவர்களுக்கு அனுப்பி வைத்தேன். 23.12.2015ம் தேதி **அ.சா.1** இராமகிருஷ்ணன் என்பவரை விசாரணை செய்து மறு வாக்குமூலம் பதிவு செய்தேன். சாட்சி **அ.சா.25** சிறப்பு சார்பு ஆய்வாளர் காளிமுத்து என்பவரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். 01.12.2015ம் தேதி சாட்சி **அ.சா.14** நாகராஜன் என்பவரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். 08.12.2015ம் தேதி சாட்சி தலைமை மருத்துவ அதிகாரி **அ.சா.26** ரிஸ்வான் அகமது என்பவரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். 11.01.2016ம் தேதி மதுரை வடக்கு வட்டார போக்குவரத்து கண்காணிப்பாளர் **சாட்சி எண்.28** ரமேஷ்குமார் என்பவர் இவ்வழக்கில் சம்மந்தப்பட்ட TN 59 BE 1830 Honda shine என்ற வாகனத்தின் பதிவு சான்று நகல் வழங்கியது பற்றி விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். அவர் வழங்கிய அறிக்கை **அ.சா.ஆ.15** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அன்றைய தினமே மதுரை தெற்கு வட்டார போக்குவரத்து கண்காணிப்பாளர் **அ.சா.24** விஷ்ணுகாந்தி என்பவர் TN 59 AL 0027 Maruti Swift காருக்கு பதிவு சான்று நகல் வழங்கியது பற்றி விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். அவர் வழங்கிய சான்று **அ.சா.ஆ.16** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

மேற்படி இரண்டு வாகனங்களின் பதிவு சான்றிதழ்களை நீதிமன்றத்திகு அனுப்பி வைத்தேன். 1வது எதிரியிடமிருந்து அத்தாட்சி மூலம் கைப்பற்றபட்ட சொத்துக்கள் மற்றும் சம்பவ இடத்தில் அத்தாட்சி மூலம் கைப்பற்றபட்ட மாருதி ஸ்விப்ட் கார் ஆகியவற்றை படிவம் 91 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். அந்த படிவங்கள் 91 (3 எண்ணம்) **அ.சா.ஆ.17** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 28.11.2015ம் தேதி இவ்வழக்கு சம்மந்தமான சட்ட பிரிவை மாற்றக்கோரி கனம் நீதித்துறை நடுவர் எண்.6 மதுரை அவர்களுக்கு சமர்பித்தேன். அந்த சட்டபிரிவு மாறுதல் அறிக்கை **அ.சா.ஆ.18** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 19.01.2016ம் தேதி சாட்சி **அ.சா.11** சுரேஷ் என்பவரை நீதித்துறை நடுவர் எண்.2 மதுரை அவர்கள் முன்பு ஆஜர் செய்து கு.வி.மு.ச 164 ன் கீழ் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது. அந்த வாக்குமூலம் **அ.சா.ஆ.19** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி இவ்வழக்கின் விசாரணை முடித்து **1வது எதிரி** மீது 341, 294(b), 307 மற்றும் 506(ii) இ.த.ச படியும், **1 முதல் 7** வது எதிரி வரை இ.த.ச பிரிவுகள் 341, 294(b), 307, 506(ii), 120 (b) r/w 31 மற்றும் 149 படியும், **7வது எதிரி** மீது 109 r/w 149 இ.த.ச படியும் குற்ற இறுதி அறிக்கை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேன்.

<u>**1 மற்றும் 3 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை :-**</u>

இந்த வழக்கின் முதல் தகவல் அறிக்கையை கே புதூர் காவல்நிலையத்தில் வைத்து 22.11.2015ம் தேதி காலை 11.50 மணிக்கு மேல்விசாரணைக்காக பெற்றுக்கொண்டேன். மேற்படி கே புதூர் காவல்நிலையத்திற்கும் மதுரை மாவட்ட நீதிமன்றத்திற்கும் இடையே சுமார் 2 கி.மீ தொலைவு இருக்கும். மேற்படி முதல் தகவல் அறிக்கையானது 22.11.2015ம் தேதி இரவு 10.30 மணிக்கு பெறப்பட்டுள்ளது என்றால் சரிதான். 1வது எதிரியை 22.11.2015ம் தேதி 16.00மணிக்கு 120 அடி ரோடு, சம்பக்குளம் புதுமயானம் அருகே வைத்து கைது செய்தேன். நான் தான் 1வது எதிரியை கைது செய்து நீதிமன்ற காவலுக்கு அனுப்பிவைத்தேன். நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைக்கும் போது 1வது

எதிரிக்கு எதாவது காயம் இருந்தால் அவருக்கு மருத்துவ சிகிச்சை அளித்து காவல் அடைப்பு அறிக்கையில் நீதிமன்றத்திற்கு தெரியபடுத்த வேண்டுமென்றால் சரிதான். மேற்படி 1வது எதிரிக்கு கால்களில் காயங்கள் இருந்து மற்றும் எலும்பு முறிவு ஏற்பட்டிருந்ததை நீதிமன்ற காவல் அடைப்பு அறிக்கையில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் இல்லை. மேற்படி நீதிமன்ற காவல் அடைப்பு அறிக்கையில் 1வது எதிரியை கைது செய்யும் போது அவர் மயான காம்புவுண்ட் சுவரை ஏறி குதித்ததால் இரண்டு கால்களிலும் வீக்கம் ஏற்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது. மதுரையில் இருக்கும் முக்கியமான வழக்குகளை பற்றி தெரியும் என்றால் எனக்கு தெரியாது. பொட்டு சுரேஷ் கொலை வழக்கை பற்றி நான் கேள்விபட்டிருக்கிறேன். 23.12.2015ம் தேதி **அ.சா.1** ராமகிருஷ்ணனை விசாரித்த போது பொட்டு சுரேஷ் கொலை வழக்கில் அவர் ஒரு சாட்சி என்பது தெரிய வந்தது என்றால் சரிதான். மேற்படி பொட்டு சுரேஷ் வழக்கில் அ.சா.1ன் உடைய கு.வி.மு.ச பிரிவு 161(3) வாக்குமூலத்தை நான் பார்க்கவில்லை. மேற்படி பொட்டு சுரேஷ் கொலை வழக்கில் யார் யார் எதிரிகள் என்ற விபரத்தை நான் பார்க்கவில்லை. நான் சொன்னபடி, சொன்ன நேரத்தில், முதல் தகவல் அறிக்கை பெறப்படவில்லை என்றும் ஏற்கனவே இருந்த அறிக்கை மற்றும் வாக்குமூலங்கள் மறைக்கப்பட்டு 1வது எதிரியை சட்டத்திற்கு புறம்பாக காவலில் எடுத்து அவரை அடித்து கால்களை உடைத்து அதில் இருந்து தப்பித்து கொள்வதற்காக 1ம் எதிரி மீது **அ.சா.ஆ.10** ஆவணத்தில் அவருடைய பெயரை உள்ளே நுழைத்து இந்த வழக்கில் புலன் விசாரணை திசைதிருப்பபட்டுள்ளது என்றால் சரியல்ல. இந்த வழக்கில் உண்மையான குற்றவாளி யார் என்றே தெரியாது நிலையில் இந்த வழக்கில் பொய்யாக சேர்க்கப்பட்டுள்ளர் என்றால் சரியல்ல. நான் **அ.சா.1** ராமகிருஷ்ணனிடமிருந்து கு.வி.மு.ச 164 வாக்குமூலம் பதிவு செய்வதற்கு வேண்டுகோள் கடிதம் நீதித்துறை நடுவரிடம் கொடுத்தேன் ஆனால் **அ.சா.1** ஆஜராகவில்லை என்றால் சரிதான். மருத்துவர் **அ.சா.26** ரிஸ்வான் அகமதுவை நான் விசாரித்த போது அவர் தான் விசாரித்தில்

21.11.2015ம் தேதி இரவு 11.00 மணியளவில் புதுார் ஏரியாவில் வைத்து தனக்கு தெரியாத ஒரு நபர் தன்னை கத்தியால் பலஇடங்களில் குத்தி காயம் ஏற்படுத்தினார் என்று இராமகிருஷ்ணன் தன்னிடம் கூறியதாக வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார் என்றால் சரிதான். மேலும் **அ.சா.1** ஐ மருத்துவர் **அ.சா.26** கேட்கும் போது  அடையாளம் தெரியாத நபர் குத்தியதாக வாக்குமூலம் கொடுத்தேன் என்று **அ.சா.1** மருத்துவரிடம் தெரிவித்தாக தன்னுடைய வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான். **அ.சா.ஆ.12** வரைபடத்தில் சம்பவ இடத்தில் கைபற்றப்பட்ட கார் நின்று கொண்டிருந்ததாக காட்டப்படவில்லை என்றால் சரிதான். மேற்படி மாருதி கார் நீதிமன்றத்தில் 24.11.2015ம் தேதி தான் பெறப்பட்டுள்ளது என்றால் 22.11.2015ம் தேதியை நீதிமன்றத்திற்கு திருப்பபட்டு மீண்டும் 24.11.2015 ம் தேதி நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. இரத்தம் படிந்த பொருட்கள் கைப்பற்றபடும் பட்சத்தில் தடய அறிவியில் ஆய்வுக்கு உட்படுத்த வேண்டும் என்பது தெரியும்,ஆனால் அனுப்பப்படவில்லை. நான் சொன்ன மாதிரி, சொன்ன நேரத்தில் சாட்சிகள் யாரையும் விசாரணை செய்யவில்லை என்றும் ஆவணங்கள் ஏதும் கைப்பற்றபடவில்லை என்றாலும், பொட்டு  சுரேஷ் கொலை வழக்கில்

கொடுக்கப்பட்ட நிர்பந்ததின் பேரில் இந்த வழக்கில் உண்மைக்கு புறம்மாக எதிரிகள் மீது குற்ற பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

**1 மற்றும் 3 எதிரிகள் தரப்பில் மேற்கொண்ட குறுக்கு விசாரணையை 2 மற்றும் 7 எதிரிகள் தரப்பில் ஏற்றுக்கொள்வதாக தெரிவிக்கப்பட்டது.**

**மறு விசாரணை –** இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சாட்சியால் "சரி" என ஒப்புக்கொள்ளப்பட்டது.

JOHN SUNDARLAL SURESH

Digitally signed by JOHN SUNDARLAL SURESH
Date: 2026.02.13 15:20:50 +0530

**நான்காவது கூடுதல் மாவட்ட நீதிபதி,**
மதுரை.